மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள -

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, விவசாயத் தோழர்களுக்காக உழைத்த பெ.சண்முகத்திற்கு - எனது மனமார்ந்த பாராட்டுதல்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை,ஜன.7-**

**"மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள தோழர் பெ.சண்முகம் அவர்களுக்கு எனது மன மார்ந்த பாராட்டுதல்கள்" என்று, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலை தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.**



கழகத் தலைவரும் முதல மைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

"மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தமிழ் மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் தோழர் பெ.சண்முகம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் விவசாயத் தோழர்களுக்காகவும் உழைத்த அவருக்கு கடந்த ஆண்டு அண்ணல் அம்பேத்கர் விருதை கழக அரசு வழங்கியது. அத்தகைய சிறப்புக்குரிய தோழர் சண்முகம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற சக்திகளின் ஒருங்கிணைப்புக்கும், கழகக் கூட்டணியின் அனைத்து வெற்றிகளுக்கும் எந்நாளும் உழைத்த தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்களின் பணிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருந்து விடை பெற்றிருந்தாலும் மக்கள் பணிக்கு விடைகொடுக்காமல் நாளும் உழைப்ப வர் தோழர் கே.பாலகிருஷ்ணன் அவர்கள் என்பதை நாடறியும்.

இரு தோழர்களும் தங்கள் பணியைத் தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறேன்."

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறளுக்கு உரை எழுதத் தொடங்கி விட்டேன்!

# பழைய தலைமுறை மதிக்க வேண்டும்! இளைய தலைமுறை துய்க்க வேண்டும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதம்!



திருக்குறளுக்கு
உரை எழுதப்போகிறேன் என்று
கன்னியாகுமரியில் அறிவித்தேன்

உரை எழுதத் தொடங்கிவிட்டேன்

உரை செய்யப் புகுமுன்னால்
சில உரைநெறிகளை
உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்

திருக்குறளின் மூலத்திற்கும்
திருவள்ளுவர் காலத்திற்கும்
மெய்யோடிருத்தல் வேண்டும்

அறத்துப்பாலும் பொருட்பாலும்
அறிவுப் பொருளாகத் திகழ வேண்டும்;
காமத்துப்பால்
கவிதைப் பொருளாக விளங்க வேண்டும்

மூலத்தின் அறிவும் செறிவும் விரிவும்
உரையிலும் ஓசை நயத்தோடு
துலங்கவேண்டும்

எவ்வளவு இயலுமோ அவ்வளவு
தனித்தமிழே ஆளப்பெறுதல் வேண்டும்

**பழைய தலைமுறை மதிக்க வேண்டும்;**
**இளைய தலைமுறை துய்க்க வேண்டும்**
**தமிழ் அருள் புரியும்** ●

திருச்சி மாவட்டம் – சமயபுரம்

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

## நாய்க்கடி தடுப்பூசி போட்டு காப்பாற்றப்பட்ட சிறுவனின் குடும்பத்தினர் – முதல்வருக்கு நன்றி!

திருச்சி, ஜன.7

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (05.01.2025) திருச்சி மாவட்டம், சமயபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்குள்ள செவிலியர்களிடம் அம்மருத்துவமனையில் உள்ள வசதிகள், தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் விசாரித்தபோது, ஒரு சிறுவன் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வந்துள்ளான். அவனுக்கு உடனடியாக சமயபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ARV என்று சொல்லக் கூடிய நாய்க்கடிக்கான தடுப்பூசி செலுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர்கள் அமைச்சர் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், 07.05.2021 இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகுதான் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் ASV, ARV என்று சொல்லக் கூடிய பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிகளுக்கான தடுப்பூசிகள் கையிருப்பில் வைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்படுகிறது.

கடந்த கால ஆட்சிக்காலத்தில் பாம்புக்கடி, நாய்க்கடி போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகுபவர்களுக்கு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் அழைத்துச் சென்றுதான் சிகிச்சைகள் வழங்க முடியும். இந்தநிலை தற்போது மாறியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சைகள் வழங்க ஏதுவாக இந்த ஆட்சி மருத்துவத்துறையை கட்டமைத்துள்ளதற்காக பாதிக்கப்பட்டுள்ள சிறுவனின் பெற்றோர் முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கும் நன்றியினைத் தெரிவித்தார்கள்.

கரூர் – குளித்தலை பகுதிகளில்

# 11 புதிய கட்டிடங்கள் திறப்பு-14 புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், ஜன.7-

மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ரூ.191 இலட்சம் மதிப்பீட்டில் 11 புதிய கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ரூ.1.772 இலட்சம் மதிப்பீட்டில் 14 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளை துவக்கி வைத்தார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மற்றும் குளித்தலை ஊரகப் பகுதிகளில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கிராமங்களின் வளர்ச்சிக்காக ஊரகவளர்ச்சித் துறைக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்து அதன் மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம். கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்ணீர் பந்தல் பாளையத்தில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சிறிய சமுதாய கூடம், வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சியில் வாங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வாங்கல் தவிட்டுபாளையத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை, மண்மங்கலம் ஊராட்சி, சிவியாம் பாளையத்தில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சிறிய அளவிலான சமுதாயக் கூடம், கிழக்கூரில் ரூ.15இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, மேற்கூர் பகுதியில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 60000 லிட்டர்கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி, ஆத்தூர் பூலாம் பாளையம் ஊராட்சி பெரிய வடுக்கட்டியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை, நொச்சிப்பாயைத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி கே.பிச்சம்பட்டி ஊராட்சியில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் கிராம செயலக கட்டிடம், குளித்தலை சட்டமன்றத் தொகுதி வடசேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கிளை, இராச்சாண்டார் திருமலையில் ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கான புதிய வாடிவாசல் கட்டிடம், ஆலந்தூர் ஊராட்சியிங் ரூ.09.லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை. சேப்பலாப்பட்டியில் ரூ.28:01 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.15 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட நூலக கட்டிடம் என மொத்தம் ரூ.191.11 இலட்சம் மதிப்பீட்டில் 11 புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அரசு காலனிபஞ்சமாதேவி நெரூர் சாலையில் ரூ.49.85 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்தல் பணி. அரசு காலனிபஞ்சமாதேவி நெரூர் சாலையில் இடைவழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அவைப்படுத்துதல், மற்றும் ரூ.356.50 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி. அரசு காலனிபஞ்சமா தேவிநெரூர் சாலை இரு வழித்தடமாக அகலப்படுத்துதல், ஏற்கனவே உள்ள குழாய் பாலத்தை பெட்டி பாலமாக ரூ.374.50 இலட்சம் மதிப்பீட்டில் திரும்பக் கட்டுதல் பணியையும்.

அரசு காலனி காந்தி நகர் பகுதியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூட கட்டுமானப் பணி, வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சியில் ரூ.1650 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டவுள்ள நியாய விலைக்கடை கட்டுமானப் பணி. கே.வேலாயுதம்பாளையத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டவுள்ள சமுதாயக் கூட கட்டுமானப் பணி, நன்னியூர் ஊராட்சி என்புதூர் பகவதியம்மன் கோவில் கிழக்கு பகுதியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டவுள்ள சமுதாயக் கூட கட்டுமானப் பணி, புஞ்சை கடம்பங்குறிச்சி ஊராட்சி பெரிய வரப்பாளையத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 30.000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை தீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி, தேசிய நெடுஞ்சாலை 7 மண்மங்கலம் முதல் பண்டுதகாரன் புதூர் வரை வழி பெரிய வள்ளிபாளையம், சின்னவள்ளிபாளையம் சாலை வரை ரூ.203.28 இலட்சம் மதிப்பீட்டில் சாலை புதுப்பித்தல் பணியையும்.

மண்மங்கலம் ஊராட்சி மேதி நகரில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டவுள்ள சமுதாயக் கூட கட்டுமானப் பணி, மேதி நகரில் ரூ.10இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி, ஆத்தூர் ஊராட்சி, பெரிய வடுகப்பட்டி காலனியில் ரூ 15இலட்சம் மதிப்பீட்டில் சிறிய சமுதாயக்கூட கட்டுமானப் பணி, கிருஷ்ணராய புரம் சட்டமன்றத் தொகுதி காணியாளம்பட்டி அரசு பாலிடெக்னிக் வளாகத்தில் ரூ.625 லட்சம் மதிப்பில் பணிமனை பணிகளையும், குளித்தலை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தோகமலை வார சந்தையில் ரூ.09.09 லட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு விழா வளைவு கட்டும் பணி, இராச்சண்டார் திருமலை முதல் சத்திரம் பேருந்து நிலையம் வரை புதிய பேருந்து வழித்தடம் என மொத்தம் ரூ.17.72 கோடி மதிப்பீட்டில் 14 புதிய திட்டப்பணிகளும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நன்னாசிகவுண்டனூர் ஏடி காலனியில் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு தரமாகவும் விரைவாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ(அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராய புரம்), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கந்தராஜா, நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் இரவிக்குமார். வட்டார வளர்ச்சி அலுவலர் விஜய லெட்சுமி. மண்மங்கலம் வட்டாட்சியர் குணசேகரன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 05.01.2025 அன்று திருச்சி மாவட்டம், சமயபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

# தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கணேசன் - புலவர் முத்து வாவாசிக்கு விருது!

## விருதாளர்களுக்கு அமைச்சர், மாவட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் வாழ்த்து!

தஞ்சாவூர், ஜன. 7 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் விருதுகளில் கழகத் தோழர்களால் முக்கிய விருதாக போற்றப்படும் பேரறிஞர் அண்ணா விருது மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கப்படும் விருது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கணேசன் மற்றும் முத்து வாவாசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தி எதிர்பு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரோடு இந்தி எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி சிறைச் சென்றவர்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவருமான தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கண்ணத்தங்குடி கீழையூர் கிரா மத்தில் பிறந்த எல்.கணேசன் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா விருதினையும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் விருதினை பெறுபவர் கலைஞர் அவர்களின் செயலாளராக பணியாற்றியவரும், இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் தொண்டாற்றிய வரும், முத்தமிழறிஞர் பற்றிய பல்வேறு நூல்களை எழுத்தியவருமான, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் பிறந்தவருமான முத்து வாவாசி அவர்களுக்கும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் விருது பெறும் கழக முன்னோடிகள் இருவரையும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாண சுந்தரம்,எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ,

ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், என். அசோக்குமார், தஞ்சை மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சிக் குழு துணை தலைவர் எஸ்.கே. முத்து ச்செல்வம் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கான சமூக வலைதள பயிற்சி கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், தலைமைக் கழக பேச்சாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி அன்பகம் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் இளைஞர்களுக்கு சமூக வலைதள பயிற்சி அளித்தார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் வி.எஸ். சாரதிகுமார், எஸ்.தாமோதிரன், கே.ஆர்.திருப்பதி, டி.சாமுடி, ம.ஸ்ரீதர், அ.செல்வராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஏ.சி.தேவகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பூ.சதாசிவம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.ஸ்ரீதர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.வி.கிரிராஜ், சி.செந்தில்குமார், நா.பெ.பிரபு, வி.தமிழ்மணி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.